# என் கிருபை உனக்குப் போதும். 2 கொரி 12 : 9

**பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்.**

ஆம் பிரியமானவர்களே,

உங்களுடைய பெலவீனத்திலே, கர்த்தர் தன்னுடைய பெலனை பூரணமாய் விளங்கப்பண்ணுகிறார். அல்லேலூயா.

அதற்கு தேவையான கிருபையை இந்த மாதத்தில் தேவன் உங்களுக்கு அளிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். தேவனுக்கே மகிமை.

நாம் தேவனுடைய கிருபையை சார்ந்து கொள்வோமாக.

**கிருபை எப்பொழுது தேவை ?**

| | | |
|---|---|---|
| நம்முடைய பலவீனம் | – | தேவனுடைய பலம் |
| நம்முடைய பாவம் | – | தேவனுடைய பரிசுத்தம் |
| நம்முடைய கடன் | – | தேவனுடைய ஐசுவரியம் |
| நம்முடைய மாய்மாலம் | – | தேவனுடைய உண்மை |
| நம்முடைய அநீதி | – | தேவனுடைய நீதி |

இதிலிருந்து என்ன உண்மை விளங்குகிறது. நம்முடைய சூழ்நிலை Negative ஆக இருந்தால் தேவனுடைய கிருபை Positive ஆக உள்ளது. நம்முடைய பிரச்சனை கசப்பாக இருக்கும் பொழுது, தேவனுடையகிருபை இனிப்பாக இருக்கிறது. ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் ஒரு கிருபை உள்ளது. ஆமென்.

கடந்த வருடம் நான் தமிழ்நாடு முழுவதும் 29 மாவட்டங்களுக்கு TVGM God 2000 மாவட்டத்தலைவர்களை நியமனம் செய்ய பஸ்ஸில் தொடர்ந்து பல நாட்களாக பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு நாள் சாத்துார் TELC Home Manager ஐ சந்தித்து பேசி கொண்டிருந்தபொழுது அவர்கள் சொன்ன ஒரு வசனம்.

**கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. ரோமர் 6 : 14**

இந்த வசனத்தை என் மனதில் வைத்து, பஸ் பிரயாணத்தில் அடிக்கடி சிந்தித்துக் கொண்டு வந்தேன். ஆராய்ச்சி செய்தேன். பல வேத வசனங்களை புரட்டிப்பார்த்தேன்.

டி.வி.ஜி.எம் புதுவருட ஆராதனையில் இந்த வசனத்தை குறித்து கூறினேன். தொடர்ந்து ஆவியானவர் என்னோடு இடைபட்டுக் கொண்டிருந்ததால் உங்கள் ஆத்துமாவுக்கு பிரயோஜமாக இருக்க செய்தியை எழுதுகிறேன்.

என்னுடைய உள்ளத்தில் வெளிப்பட்ட சத்தியம் என்னவென்றால், கிருபை என்றால் ஏதோ ஒரு காரியத்துக்கு மட்டும் அல்ல.

மனிதனுக்கு ஏற்படும் விதவிதமான அத்தனை சோதனைகளுக்கும் அதை மேற்கொள்ள தேவன் அளித்த விதவிதமான உயர்ந்த பரிகாரங்கள் தேவனுடைய கிருபையாகும்.

**1 பேதுரு 5 : 10 கூறுகிறது :** சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக.

**2 கொரிந்தியர் 9 : 8 ல் .** தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்

**என் கிருபை ? உதாரணமாக 2 கொரிந்தியர் 8 : 1 ஐ படித்துப் பாருங்கள்.**

அன்றியும் சகோதரரே மக்கெதோனியா நாட்டு சபைகளுக்கு தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர் களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள்.

இதை பகுத்து படிதது பார்ப்போமாக

| **மனுஷனுடைய பலவீனம்** | **தேவ பலம் / தேவ கிருபை** |
|---|---|
| மிகுந்த உபத்திரவம் | பரிபூரண சந்தோஷம் |
| கொடிய தரித்திரம் | மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள். |

என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே,

உன்னுடைய வாழ்க்கை Worst ஆக இருக்கும் பொழுது தேவ கிருபை உன் வாழ்க்கையை Best ஆக மாற்றி விடுகிறது.

**அப்படியென்றால் பாவம் பெரிதா ? தேவ கிருபை பெரிதா ?**

**எதுவென்று நீங்களே சொல்லுங்கள்.**

**இன்னொரு கேள்வியை கேட்கிறேன்.**

தண்ணீர் வலிமை வாய்ந்ததா ? அல்லது நெருப்பு வலிமை வாய்ந்ததா ? (நானே கூறுகிறேன்)

**தண்ணீர் சிறிய அளவாக இருந்தால், நெருப்பு வலிமை வாய்ந்தது.**

**நெருப்பு சிறிய அளவாக இருந்தால், தண்ணீர் வலிமை வாய்ந்தது.**

எரிகிற அக்கினி சூளைக்குள் 1 தம்ளர் தண்ணீரை ஊற்றினால் உடனே தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. ஆனால் பெரிய குளத்துக்குள் எரிகிற குச்சியை மூழ்க வைத்தால் உடனே அணைந்து போகிறது. இவ்வளவு தான்.

இதைப்போலத்தான், பாவத்தையும், தேவனுடைய கிருபையையும் வலிமை ஆக்குவது அல்லது செயல் இழக்க வைப்பது உன்னிடத்தில் தான் உள்ளது. நீ கர்த்தருடைய கிருபையை சார்ந்திருந்தால் பாவம் உன்னை மேற்கொள்ள மாட்டாது. பாவத்திற்கு எதிரான தேவனுடைய கிருபை என்ன ? தேவ பரிசுத்தம்.

ஆண்டவரே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. நீர் பரிசுத்தர், பரிசுத்தர். உம்முடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி சுத்திகரிக்கிறது. உம்முடைய இரத்தத்தினாலே நான் நீதிமானாக்கப்பட்டுள்ளேன். உம்முடையபரிசுத்தத்தை எனக்குத்தாரும் இயேசுவே, பரிசுத்தம் என்ற **கிருபையைத்** தாரும் என்று நாம் ஜெபித்துக் கொண்டிருக்கும்பொழுது, **பரிசுத்தம் என்னும் தேவ கிருபை** உங்களை சூழ்ந்து கொள்ளுகிறது. பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது. இதற்கு பதிலாக பாவத்தையே நீ பிரதானப்படுத்தி, அதையே சிந்தித்து அதையே மேன்மைபடுத்துவாயானால், பாவம் உன்னை மேற்கொள்ளும்.

**ஆதலால் தான் வேதாகமம் கூறுகிறது.** அவர்கள் தங்கள் சிந்தைகளினாலே, வீணரானார்கள் – என்பதாக.

**சங்கீதம் 119 : 113 கூறுகிறது** : வீண் சிந்தனைகளை வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன் என்பதாக. பாவத்தையும், தேவ கிருபையையும் குழப்பக்கூடாது.

**யூதா 4ம் வசனம் கூறுகிறது :** ஏனெனில் நமது தேவனுடைய கிருபையை காம விகாரத்துக்கேதுவாக புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் மறுதலித்த பக்தியற்றவர்களாகிய சிலர் பக்க வழியாய் நுழைந்திருக்கிறார்கள் – என்பதாக.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே,

இந்த மாதத்தில் கீழ்க்கண்ட ரோமர் 6 : 14 ம் வசனத்தை அடிக்கடி நினையுங்கள். நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராமல் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது.

**2 கொரிந்தியர் 12 : 9**

பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்.

என் கிருபை உனக்குப்போதும்.

**சங்கீரம் 147 : 11 கூறுகிறது.**

தமக்குப் பயந்து, தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார் என்பதாக.

**தேவ கிருபையை பெற்றுக்கொள்ள நாம் செய்ய வேண்டிய பொதுவான காரியங்கள்.**

1. **கர்த்தரை நம்பு – சங் 32 : 10**: கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும்.
2. **கர்த்தருக்கு பயப்படு – சங் 103 : 11** பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது.
3. **தாழ்மையாக இரு – யாக் 4 : 6 –** ஆதலால் தேவன் பெருமை யுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்.
4. **ஸ்தோத்திரம் பண்ணு – 2 கொரி 4 : 15 –** தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாக கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத் தினாலே பெருகும்படிக்கு இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டாயிருக்கிறது.

எனக்கு அன்பான கர்த்தருடைய பிள்ளைகளே,

இந்த மாதம் கீழ்க்கண்டவாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**நான் கர்த்தருடைய கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால்,**
**பாவம் என்னை மேற்கொள்ளமாட்டாது.**

**கர்த்தரின் கிருபை எனக்குப் போதும் – ஆமென்.**